**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

- - - - -

# IN THE COURT OF SESSIONS, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 17** |
| **Name** | : | **திரு. ஜிம் ஜேசுதாஸ் விஜிசாமுவேல்** |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.11.2025**

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

நான் தற்போது மதுரை முத்துப்பட்டி, சக்தி விடியல் காப்பகத்தின் செயல் இயக்குநராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு, மதுரை மாவட்ட குழந்தைகள் நலக் குழுவின் தலைவராக கடந்த நவம்பர் 2018 வரை பணிபுரிந்து வந்தேன். அப்போது, 21.06.2016 ம் தேதியன்று நடைபெற்ற குழுவின் அமர்வில், மதுரை மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஆட்கடத்ததில் தடுப்பு காவல் பிரிவு, Child line மற்றும் கூடல்புதூர் காவல் நிலைய போலிசார் ஆகியோர் இணைந்து மீட்ட 11 நாட்கள் ஆன ஆண் குழந்தையை குழுவில் ஆஜர்படுத்தினர். அந்த குழந்தைக்கு, குழுவில் எழில் என்று பெயரிடப்பட்டது. CWC எண்.17/2016-ன்படி அந்த குழந்தையை மதுரையில் உள்ள கிரேஸ் கென்னட் மழலையர் இல்லத்தில் வைத்து

தற்காலிகமாக தங்க வைத்து பராமரிக்க உத்தரவிடப்பட்டது. **CWC ன் 03.08.2016 ம் தேதியிட்ட மேற்படி உத்தரவு அதசாஆ.9 ஆகும்**. ஆய்வாளர் என்னை 03.08.2016 ம் தேதியன்று விசாரணை செய்தார். நான் மேற்படி விபரங்களைச் சொன்னேன்.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை